14th March 1958]

SRI K. PONNIYYAN : தலைவர் அவர்களே, தற்போது கொய்னாவினால் சர்க்காருக்கு அதிகமான நஷ்டம் எற்படுவதாகக் கேள்விப் படுகிறேன். உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுடைய வசதிகள், சம்பளங்கள் முதலியன அதிகப் பட்டிருப்பதனால் நஷ்டம் சிறிது ஏற்பட்டுவருகிறது. இருந்தாலும் இனி என்ன செய்வது என்பது முற்றிலும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. JAGANNATHAN : The synthetic manufacture of anti-malarial drugs started by the Government of India is offering serious competition to the quinine consumption by this State. What steps have been taken by this State to stop the synthetic production of anti-malarial drugs by the Government of India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no idea of completely banning the production or distribution of synthetic manufacture in Madras. But when I said that there was a demand for one lakh tons of quinine products in this State, I excluded about 40,000 tons of synthetic products that were available.

SRI K. RAMASUBBU : பெங்கால் கொய்னாவுக்கும் நமது கொய்னாவுக்கும் தரத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தரத்தில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்லமுடியாது. நஷ்டப்பட்டாலும் விற்கவேண்டும் என பக்கத்து ராஜ்யத்தில் அனுப்புகிறார்கள்.

Harijan Welfare

* 327 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received the film entitled "Harijan Welfare" from the Film Division of Government of India; and

(*b*) if so, the steps taken to screen it in all the cinema theatres in the State?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. JAGANNATHAN : இந்த "ஹரிஜன நலன்" என்ற சினிமா படம், மத்திய சர்க்காரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை நமது சர்க்கார் வாங்கி தமிழ் நாட்டில் இருக்கிற சினிமா கொட்டகைகளில் அந்தப் படத்தைக் காட்டினால் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்கு அது மிகவும் அனுகூலமாக இருக்குமாதலால் அதைச் செய்ய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த ஆலோசனை பரிசீலனை செய்யப்படும்.

Untouchability

* 328 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have taken any full length feature film depicting the fight against the practice of untouchability; and

(*b*) if so, when it will be released to the public?

[14th March 1958

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. JAGANNATHAN : மத்திய சர்க்கார் எடுத்திருக்கும் அந்த "ஹரிஜனநலன்" என்ற சினிமா படத்தை இந்த சர்க்கார் வாங்குவதற்கு ஏதாவது கஷ்டம் இருந்தாலும் இந்த சர்க்காரே முன் வந்து "புள் ப்யூச்சர் பிலிம்" தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக எடுத்துக்கொண்டு அதை நம் நாட்டிலுள்ள சினிமாக் கொட்டகைகளில் காட்ட சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பே சொன்னேன், அதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரப்படும்.

SRI A. V. P. ASAITHAMBI : "ஒன்றே குலம்" என்ற படத்தை அங்கத்தினர்களுக்கெல்லாம் போட்டுக் காண்பித்தார்கள். அதன் நோக்கம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதா அல்லது அதை வாங்கி நாட்டில் பிரசாரத்திற்காக அனுப்பவேண்டுமென்ற உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அது வாங்குவது சம்பந்தமானது, அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

MR. SPEAKER : கரையாளர் அவர்கள் 329-ம் கேள்வியைப் போடவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

Kanitha Pulavar Community

* 331 *Q*.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any representation has been received recently from the members of the Kanitha Pulavar Community requesting for the inclusion of their community in the list of Scheduled Castes or the Most Backward Classes; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government.

SRI M. S. SELVARAJAN : கனிதப்புலவர்கள் ஜில்லாவாரியாக எந்தெந்த ஜில்லாக்களில் பரவியிருக்கிறார்கள். ஜில்லாவாரியாக அவர்களின் சங்கியையின் விவரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் சொல்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGES FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor of Madras has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Indian Stamps (Madras Amendment) Bill, 1958.

I have also to announce that the Governor of Madras has given his recommendation to the Madras Legislative Assembly for the consideration of the Madras Children (Amendment) Bill, 1958.